சாட்சிய வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)
முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்
அமர்வு வழக்கு எண்.102/2017

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.-8வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 2ம் எதிரி ஆஜர். 1,3ம் எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சதாசிவம் | மாவட்டம் | : |
| த/பெ.பெயர் | : நாராயணன் | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

<u>**மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

1. அ.சா.1 வாசுதேவன் என்னுடைய நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். ஒரு மருத்துவர் என்ற முறையில் ஒருவருடைய தற்கொலைக்கான காரணம் எனக்கு தெரியும் என்றால் அதை உடனடியாக போலீசாரிடம் சொல்ல வேண்டும் என்கிற விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். அருண்ராம் இறந்த போனஅன்றே குற்றவழக்காக பதிவுசெய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் தற்கொலை வழக்காக பதிவு செய்த விபரம் தெரியும்.

2. இறந்துபோன அருண்ராம் உடல்மீது அரசு மருத்துவமனையில் பிரேதபரிசோதனை செய்தபோதும், போலீசார் பிரேதவிசாரணை செய்தபோதும் நானும் மருத்துவமனையில் தான் இருந்தேன் என்றால் நான் இருந்தேன். நான் அப்போது இருந்தபோது எதிரிகள் மூவரும் என்னிடம் அலைபேசியில் அருண்ராம் இறப்பதற்கக்கு 4 நாட்களுக்கு முன்பு என்னிடமும், மனைவியுடமும் பேசியதாகவோ அருண்ராமிற்க்கு மிரண்டல் விடுத்ததாகவோ நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தம்பி இறந்து பிரேதகூராய்வு நடந்துகொண்டடிருக்கும்போது எந்த போலீசாரும் என்னை அந்த சமயத்தில் விசாரிக்கவில்லை.

3. எதிரிகள் மூவரும் என்னிடம் மற்றும் என் மனைவியுடமும் அருண்ராம் இறப்பதற்க்கு 4 நாட்களுக்கு முன்பு அலைபேசியில் பேசவோ, மிரட்டவோ

இல்லை என்கிற காரணத்தினால்தான் நான் அன்றை தினம் போலீசாரிடம் எந்த வாக்குமூலம் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 30.06.2014ல் போலீசார் என்னை விசாரித்தபோது கூட எதிரிகள் மூவரும் என்னிடம் மற்றும் என் மனைவியுடமும் அருண்ராம் இறப்பதற்க்கு 4 நாட்களுக்கு முன்பு அலைபேசியில் பேசி அருண்ராமிற்க்கு அன்றைய தினம் மிரட்டியதாகவோ அல்லது பேசியதாகவோ என்ற விபரத்தை அ.சா.1 மற்றும் அ.சா.2யிடம் அவர்கள் அலைபேசியில் பேசியதாக சொல்லப்படும் தினத்தன்றோ அல்லது அருண்ராம் இறந்த தினத்தன்றோ கூறியதாக போலீசார் விசாரணையில் செல்லவில்லை என்றால் சரியல்ல. 13.06.2014 மற்றும் 14.06.2014 ஆகிய தேதிகளில் மஞ்சு என்பவர் 13.06.2014 தேதி பேசினார். மேலும 14.06.2014 அன்று மஞ்சுவின் அலைபேசியில் இருந்து அவரது தாயார் பேசினார் அப்போது மஞ்சுவின் தந்தை அலைபேசியை பிடுங்கி என்னிடம் அவர் கல்யாணத்திற்க்கு எதுவும் பிரச்சனை ஏற்பட்டால் என் தம்பி உயிருடன் இருக்கமாட்டார் எங்களுக்கும் ஈரோட்டில் தகுந்த ஆட்கள் இருக்கிறார்கள் என்று எச்சரித்து அலைபேசியை துண்டித்தார். மேற்படி விபரத்தை அ.சா.1 மற்றும் அ.சா.2 விடம் அலைபேசியில் சொன்னேன் மேலும் அனைத்துவிபரங்களையும் 30.06.2014 அன்று போலீசார் விசாரணையில் சொன்னேன்.

4. எதிரிகள் மூவரும் அலைபேசியில் பேசாதகாரணத்தினால்தான் போலிசாரிடமோ, நீதிமன்றத்திலோ அது குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி போலீசார் விசாரணையில் என் மனைவி என்னுடன் இருந்தார் என்று சொன்னேனா என்றால் இல்லை. எதிரிகள் மூவரும் என்னுடன் அலைபேசியில் பேசியதாக சொல்லப்படும் விபரத்தை இறந்துபோன அருண்ராமிற்க்கு சொன்னதாக சொல்லியதற்க்கு அலைபேசி கால்கிஸ்ரி என்ற ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அலைபேசியின் கால்கிஸ்ரி இல்லை.

5. நான் அவ்வாறு அருண்ராமிற்க்கு அலைபேசியில் எதிரிகள் மூவரும் என்னிடம் பேசியதாக சொல்லப்படும் விபரத்தை சொல்லவில்லை என்பதால்தான் அதற்கான ஆவணம் எதுவும் இல்லை அதனால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. 30.06.2014 அன்று போலீசார் என்னை விசாரித்தபோது நான் என்னுடைய அலைபேசியை எடுத்து பேசும் போது யார் என்று என்னால் அங்கீகரிக்க முடியவில்லை என்றும் காரணம் மஞ்சுவின் நம்பர் எனக்கு தெரியாத காரணத்தினால் அவர் யார் என்று என்னால் அறிய முடியவில்லை என்றும் தொடர்ந்து மஞ்சு என்னை மாமா என்று கூறி அதன் பின்பு உறவுமுறை கூறியதின் அடிப்படையில் மஞ்சு யார் என்று

என்னால் அறிய முடிந்தது என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

7. மேலும் போலீசார் என்னை விசாரித்தபோது என் மனைவி என்னுடன் இருந்ததால் என்னுடைய அலைபேசியை ஸ்பீக்கர் மூலம் போட்டு பேசினேன் என்று போலீசார் விசாரணையில் கூறுவில்லை என்றால் சரியல்ல.

8. மேலும் போலீசார் விசாரணையில் 2ம் எதிரி என்னிடம் அலைபேசியில் என் மகளுக்கு 18.06.2014 அன்று சென்னிமலை செங்குந்தர் திருமண மண்டபத்தில் திருமணம் நடக்க உள்ளதாக என்னிடம் கூறியதாகவும் அதே நேரத்தில் 2ம் எதிரியின் கணவர், 1ம் எதிரி அலைபேசியை பிடிங்கி அருண்ராமால் நடக்க இருக்கும் திருமணத்திற்கு ஏதாவது பிரச்சனை வந்தால் என்னுடைய தம்பியை நான் மறந்துவிட வேண்டியதான் என்று போலீசார்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

9. மேற்படி தொடர்ச்சியாக அருண்ராம் தன்னுடைய அலைபேசியில் கதறி அழுது கொண்டு 1 மற்றும் 2 எதிரிகள் சொன்னமாறி இல்லை என்றும் எதிரிகளின் மகளான மஞ்சுதான் என்னை கூப்பிட்டு கொண்டிருக்கிறார் என்றும் வேனுமானால் outgoing, incoming call history யை எடுத்து எனக்கு அனுப்புவதாக அருண்ராம் என்னிடம் கூறினார் என்பதை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

10. மேலும் மேற்கண்ட தேதியில் மாலை 6.30 மணி அளவில் அருண்ராம் என்னை என்னுடைய மருத்துவமனையில் சந்திக்க வந்தார் என்றும் அருண்ராம் கசங்கிய உடையுடன் மனம் சோர்ந்த நிலையில் என்னை பார்க்க வந்தார் என்றும் மேலும் அவர் என் முன்பு உட்காராமல் தலைகுனிந்து கொண்டே அரை மணி நேரம் நின்று கொண்டிருந்தார் என்றும் நான் உடனே அருண்ராமிடம் மஞ்சுவிற்கு திருமணம் நடக்கபோவதால் அது சம்மந்தமாக எவ்வித பிரச்சனையும் வேண்டாம் என்று அறிவுறித்தினேன் என்றும் அப்போது அவர் கதறி அழுது கொண்டு கடந்த 8 வருடங்களாக மஞ்சுவை தன்னுடைய மனைவியாக நினைத்து வாழ்ந்து வருகிறேன். மஞ்சுவும், அவருடைய குடும்பத்தாரும் என் தம்பியான அருண்ராமை ஏமாற்றிவிட்டதாக என்னிடம் கூறினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11. மேலும் போலீசார் விசாரணையில் என்னுடைய அலைபேசி மூலம் என் சித்தபாவை அழைத்து அவரிடமும் என் சித்தியிடமும் அருண்ராம் மனச் சோர்வுடன், மிகவும் மனம் உடைந்து உள்ளார் என்றும் அவரை நல்லபடியாக பார்த்துக்கொள்ளும்படி அவர்களிடம் நான் அறிவுறித்தினேன் என்றும் போலீசார் விசாரணையில்சொல்லவில்லை என்றால் சரியல்ல.

12. நான் அ.சா.1ன் நெருங்கிய உறவினர் என்பதால் அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகள் என்னை அலைபேசியில் அழைத்ததாகவும், மிரட்டியதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் எனக்கும் எப்போதும் தொடர்பு இருந்தது இல்லை என்றால் சரியல்ல. தூரத்து உறவு ஆகும். 3ம் எதிரி அருண்ராமை காதலித்ததும் இல்லை எதிரிகள் மூவரும் அருண்ராமின் தற்கொலைக்கு காரணம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை